[பேரவைத் தலைவர்] [2015 ஏப்ரல் 1

திரு. டி.பி.எம். மைதீன்கான் ஆகியோர் விதி 56-ன்கீழும், திரு. டி. செங்குட்டுவன், விதி 55-ன்கீழும், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அ. சவுந்தரராசன், செல்வி கே. பாலபாரதி, திரு. க. பாலகிருஷ்ணன், திரு. கே. தங்கவேல், திரு. ஏ. லாசர், திரு. ப. டில்லி பாபு, திரு. இரா. அண்ணாதுரை, திரு. ஆர். ராமமூர்த்தி, திரு. வீ.பி. நாகைமாலி ஆகியோரும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எம். ஆறுமுகம், திரு. கே. உலகநாதன், திரு. பி.எல். சுந்தரம் ஆகியோரும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்களும், மனிதநேய மக்கள் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, திரு. அ. அஸ்லம் பாஷா ஆகியோரும், புதிய தமிழகம் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி ஆகியோரும் பேரவை விதி 55-ன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக் கொள்கிறேன். இதுகுறித்து அறிவிப்புக் கொடுத்தவர்கள் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில், தி.மு.க. கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள். (குறுக்கீடு)

3. தகவல் கோரல்

(அ) குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை

***திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சப்ஜெக்ட்டுக்குள் போய்விட்டேனே! (குறுக்கீடு) என்னவென்று சொல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்களை எடுத்துக் கொண்டதற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால் அதேநேரத்தில் முக்கியமான பிரச்சினை, சென்னை மற்றும் தமிழகம் முழுவதும் இன்றைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய குடிநீர்ப் பிரச்சினை. அதையும் எடுத்துக்கொண்டால் இன்னும் நன்றாக இருக்கும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. முதலில் இதுசம்பந்தமாகப் பேசுவோம், பிறகு பார்க்கலாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இதுகுறித்து விரிவான விளக்கம் சட்டமன்றத்திலே அளிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தரப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரிவான விளக்கம் அளித்திருக்கிறார்கள். அதற்கு மேல் ஒன்றும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள். (குறுக்கீடுகள்) இல்லை. அதுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரிவான விளக்கப் பேரவையின்முன் வைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லிவிட்டார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், துறை சார்ந்த செயலாளர்கள், அலுவலர்கள் கேட்ட நிதி போதிய அளவில் அனைத்து மாவட்டங்களுக்கும் வழங்கப்பட்டிருக்கின்றது. நிலைமையைக் கூர்ந்து கவனித்து, தேவை ஏற்படின் கூடுதல் நிதி ஒதுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

2. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

(அ) ஓசூர் தனியார் பள்ளியில் மேல்நிலை கணிதத் தேர்வின்போது வினாத் தாள் வெளியானது-தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் செயல்பட்டுவரும், பரிமளம் தனியார் பள்ளியில் கடந்த 18-3-2015 அன்று நடைபெற்ற